# சான்றாளரின் சாட்சிய வாக்குமூலம்
# (DEPOSITION OF WITNESS)

மேற்கோள்:– 1. குற்றவியல் நடைமுறை விதிகளின் 42–ஆம் விதி, 53–ஆம் நீதிமன்ற படிவம்
(Rule 42 and Judicial from No. 53 of Criminal Rules of Practice)
2. குற்றவியல் நடைமுறை தொகுப்பு சட்டத்தின் XXIII–ஆம் அத்தியாயம்
(Chapter XXIII Code of Criminal Procedure)

## மூன்றாம் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, சேலம்
(IN THE COURT
OF THE III–ADDITIONAL DISTRICT SESSIONS JUDGE, SALEM).

| | | |
|---|---|---|
| வழக்கு எண் | :– | S.C.No.326/2018 |
| வாக்குமூலம் அளிக்கும் சான்றாளரின் வரிசை எண் | :– | அ.சா– 15 ( PW– 15 ) |
| பெயர் | :– | விதுன்குமார் |
| கணவரின்/தகப்பனாரின் பெயர் | :– | |
| ஊர் | :– | |
| வருவாய் வட்டம் | :– | |
| சமூகம் (சாதி) | :– | |
| தொழில் | :– | |
| மதம்/சமயம் | :– | |
| வயது | :– | |

2026–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 07 ஆம் நாள் 1969–ஆம் ஆண்டில் ஆணையுறுதிச் சட்டத்தின் (நடுவன் சட்டம் 44/1969) வகையங்களுக்கு இணங்க சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

சான்றாளரின் கையொப்பம்

எதிரி தோன்றினார். எதிரியின் வழக்குரைஞர் தோன்றினார்.

**முதல்விசாரணை**

நான் தற்போது மதுரை மாநகர செல்லூர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிகிறேன். நான் 28.12.2017-ஆம் தேதியன்று நான் சேலம் மாநகர அழகாபுரம் காவல் நிலையத்தில் 15.00 மணிக்கு காவல் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது சேலம் அரசு மருத்துவமனை யில் இருந்து வந்த தகவலை பெற்று நான் அங்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த தென் அழகாபுரத்தை சேர்ந்த துரைசாமி என்பவரின் மகன் செல்வக்குமார் என்பவரை பார்த்தேன். அவர் பேச முடியாத நிலையில் இருந்தார். அவருடன் அவரது மனைவி வசந்தவேணி இருந்தார். அவரின் என்ன நடந்தது என்று கேட்டு விசாரித்து புகார் வாக்குமூலம் எழுதி காவல் நிலையத்திற்கு எடுத்து வந்து நிலைய குற்ற எண் 434/2017-ல் இந்திய தண்டனை தொகுப்பு சட்டத்தின் 294(b)-ஆம் பிரிவு, 324-ஆம் பிரிவு, 506(பகுதி 2)-ஆம் பிரிவு ஆகிய பிரிவுகளின்கீழ் தண்டிக்கதக்க குற்றங்களுக்காக முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்தேன். முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ–10** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

வழக்கை நான் புலனாய்விற்கு எடுத்துக்கொண்டு அன்றே 16.00 மணிக்கு சம்பவ இடமான தென் அழகாபுரத்தில் பேருந்து நிறுத்தத்திற்கு அருகில் உள்ள மண்பானை கடை இருக்கும் இடத்திற்கு சென்று சான்றாளர்கள் சுரேஷ்குமார், சரவணன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகசரும் மாதிரி வரைபடமும் தயாரித் -தேன். மாதிரி வரைபடம் **அ.சா.ஆ–11** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

தொடர்ந்து சான்றாளர்கள் வசந்தவேணி, சதீஸ்குமார், குமார், ஹரிராம், கலையரசி, மணிகண்டன், சுரேஷ்குமார், சரவணன் ஆகியோரை தனிதனியே விசாரித்து வாக்குமூலங்கள் பதிவுசெய்தேன். அதுவரை மேற்கொண்ட புலனாய்வில் இருந்து புகாரில் சொல்லப்பட்ட சம்பவம் நடந்தது உண்மை என்று நம்ப உறுதியான காரணம் இருந்தது. அதனால் எதிரியை கைது செய்வதற்காக தேடினேன்.

31.12.2017-ஆம் தேதியன்று காலை 10.05 மணிக்கு சிகிச்சையில் இருந்த செல்வக்குமார் இறந்துவிட்டார் என்று தகவல் வந்தது. அதனால் இந்த வழக்கை இந்திய தண்டனை தொகுப்பு சட்டத்தின் 302-ஆம் பிரிவின்கீழ் தண்டிக்கதக்க குற்றத்திற்கான வழக்காக மாற்றி அறிக்கை தயாரித்து அதிகாரவரம்புள்ள நீதித்துறை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பினேன். அந்த அறிக்கை **அ.சா.ஆ–12** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்த வழக்கை தொடர் புலனாய்விற்காக காவல் ஆய்வாளரின் பார்வைக்கு வைத்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்குவிசாரணை**

அழகாபுரம் காவல் நிலையத்தில் இருந்து சேலம் அரசு மருத்துவமனை சுமார் 03 கி.மீ தூரத்தில் இருக்கும். 10 நிமிடத்தில் அங்கு செல்லமுடியும். செல்வக்குமாரை மருத்துவமனையில் அனுமதித்தபோது பதிவுசெய்யப்-பட்ட விபத்து தகவல் பதிவேடு யாரால் பெறப்பட்டது என்றால் தலைமை காவலர் 1359 செந்தில்குமார் என்பவரால் 25.12.2017-ஆம் தேதியன்று பெறப்பட்டது. எத்தனை மணிக்கு பெறப்பட்டது என்று எனக்குத் தெரிய -வில்லை.

25.12.2017-ஆம் தேதியன்று நான் சேலம் அரசு மருத்துவமனைக்கு சென்றபோது அங்கு செல்வக்குமார் இல்லை என்றும் தன்னிச்சையாக வெளியேறிவிட்டார் என்றும் அந்த தகவலை பெற்றும் விபத்து தகவல் பதிவேடு, காவல் துறை தகவல் ஆகியவற்றை பெற்று வந்து பொது நாட்குறிப்பில் பதிவுசெய்தபின் செல்வக்குமாரின் முகவரியை தேடி சென்றபோது அவர் மீண்டும் மருத்துவமனையில் 28.12.2017-ஆம் தேதியன்று சேர்ந்திருக்கிறார் என்று தெரிந்து மருத்துவமனைக்கு சென்றதாக முதல் தகவல் அறிக்கையில் வாகசம் உள்ளது என்றால் சரிதான். செல்வக்குமார் குறித்து யாரிடம் விசாரித்தேன் என்றால் குறிப்பிட்டு பெயர் சொல்ல முடியாது.

நான் எத்தனை மணிக்கு புகார் வாக்குமுலம் வாங்கினேன் என்று குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை பதிவு -செய்யப்பட்ட நேரத்தை குறிப்பிட்டுள்ளேன். எத்தனை மணிக்கு நான் புகார் வாக்குமூலம் வாங்கினேன் என்ற விவரத்தை புலனாய்வு அதிகாரியிடம் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தல் பெறப்பட்ட சாட்சி கையொப்பம் என்னால் பெறப்பட்டது என்று முதல் தகவல் அறிக்கை -யில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். புலனாய்வின்போதும் சொல்லவில்லை என்றால் சரிதான். சாட்சி கையொப்பம் போட்டவரை விசாரித்து வாக்குமூலம் வாங்கினேன். புகாரில் சாட்சி கையொப்பம் போட்ட வரின் முகவரி விவரம் இல்லை என்றால் சரிதான். அவ்வாறு வாங்காததற்கு குறிப்பிட்ட காரணம் எதுவும் இல்லை.

முதல் தகவல் அறிக்கையில் 03-ஆம் பத்தியில் காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள், நேரம் என்ற இடத்தில் 28.12.2017-ஆம் தேதியன்று 15.00 மணிக்கு என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

25.12.2017-ஆம் தேதியிட்ட விபத்து தகவல் பதிவேட்டின்படி செல்வக்குமாரை சிகிச்சையில் சேர்த்தவர் பெயர் வசந்த என்று உள்ளது என்றால் சரிதான். தெரிந்த நபர் ஒருவரால் 23.12.2017-ஆம் தேதியன்று மாலை 07.00 மணிக்கு அவரது வீட்டிற்கு அருகில் மரக்கட்டையால் தாக்கப் -பட்டார் என்று உள்ளது என்றால் சரிதான். 28.12.2017-ஆம் தேதியிட்ட விபத்து தகவல் பதிவேட்டில் செல்வக்குமார் 03 நாட்களுக்குமுன் தானாக Auto-வில் இருந்து கீழே விழுந்துவிட்டார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதிலேயே அவருடைய மனைவி சொன்னதாக தெரிந்த 02 நபர்கள் அழகாபுரம் முதன்மை சாலையில் கட்டையால் செல்வக்குமாரை அடித்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

செல்வக்குமாரின் மகன் வசந்தை நான் விசாரித்து புகார் வாக்குமூலம் வாங்கவில்லை. அவரிடம் நான் வாக்குமூலமும் பதிவுசெய்யவில்லை. முதல் தகவல் அறிக்கையில் 15-ஆம் வரிசையில் நீதிமன்றத்திற்கு அனுப்பப் -பட்ட நாள் என்பதில் 28.12.2017 என்று உள்ளது என்றால் சரிதான். அன்றே முதல் தகவல் அறிக்கையில் புகார் வாக்குமூலமும் அதிகாரவரம்புள்ள நீதித்துறை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளதாக குறிப்பு உள்ளது என்றால் சரிதான். எந்த காவலர் மூலம் அனுப்பப்பட்டது என்று குறிப்பாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான். நான் மேற்சொன்ன

நாளில் அதிகாரவரம்புள்ள நீதித்துறை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கு முதல் தகவல் அறிக்கையும் புகாரையும் அனுப்பவில்லை என்றால் சரியல்ல.

30.12.2017-ஆம் தேதியன்றுதான் முதல் தகவல் அறிக்கையும் புகார் வாக்குமூலமும் அதிகாரவரம்புள்ள நீதித்துறை குற்றவியல் நடுவர் நீதிமன்ற -த்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு சரியாக நினைவில்லை. அந்த 02 நாட்கள் முதல் தகவல் அறிக்கையும் புகார் வாக்குமூலத்தையும் யார் வைத்திருந்தது என்றால் என்னிடம் இருந்திருக்கும். அதற்கான காரணம் ஏதாவது உண்டா என்றால் குறிப்பாக எதுவும் இல்லை.

மாதிரி வரைபடத்தில் சாலையில் சம்பவம் நடந்ததாக குறிப்பிடப் -பட்டுள்ளது என்றால் சாலையின் ஓரத்தில் நடந்ததாக குறிப்பிடப் -பட்டுள்ளது. மாதிரி வரைபடத்தில் மண்பானை கடை இருந்ததாக குறிப்பு இல்லை என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தில் மண்பானை கடைக்கு அருகில் சம்பவம் நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

சான்றாளர்கள் அர்ச்சுனன், குமார், மணிகண்டன், வசந்தவேணி ஆகியோர் சொன்ன வாக்குமூலத்தில் செல்வகுமார் SKS மருத்துவமனை -யில் சிகிச்சை பெற்றதாக சொல்லியுள்ளனர் என்றால் சரிதான். அங்கு முதல் உதவி சிகிச்சை அளித்த மருத்துவரை நான் விசாரித்து வாக்குமூலம் பதிவு-செய்யவில்லை என்றால் சரிதான். 24.12.2017-ஆம் தேதியன்று செல்வக்குமார் ஐஸ்வர்யம் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதாக மேற்சொன்ன சான்றாளர்கள் வாக்குமூலத்தில் சொல்லியுள்ளனர் என்றால் சரிதான். அந்த மருத்துவமனையில் மருத்துவரை நான் விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

சான்றாளர் பரமேஷ்வரன் சொன்ன வாக்குமூலத்தில் 25.12.2017-ஆம் தேதியன்று செல்வக்குமாரை சேலம் அரசு மருத்துவமனையில் சேர்த்ததாக வாக்குமூலத்தில் சொல்லியுள்ளார் என்றால் அவரை நான் விசாரிக்க -வில்லை. நான் உரிய முகாந்திரம் இன்றி இந்த வழக்கை இந்திய தண்டனை தொகுப்பு சட்டத்தின் 302-ஆம் பிரிவின்கீழ் மாற்றி அறிக்கை தாக்கல் -செய்தது தவறு என்றால் சரியல்ல. செல்வக்குமார் இறந்ததற்கும் எதிரிக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.